REGD. NO. M. 6311 ★ தனி இதழ் 0—1—0 (7 காசுகள்) ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

நம் நாடு

தி.மு.க. தினஇதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

மலர் 5] சென்னை: ஆவணி 20உ வியாழன் (5—9—57) ★ ✩ வெளியீடு: ஆவணி 21உ வெள்ளி (6—9—57) [இதழ் 71

கலைவாணர் நினைவாக!

"கலையுலகத் தனிவேந்தர் கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன் அவர்கள் தமிழகத்தைக் கண்ணீர் வெள்ளத்திலே மிதக்க விட்டு இறப்புலகு ஏகிவிட்டார். ஆயினும், இறவாப் புகழை அவனியிலே எய்திவிட்டார். அவரது நினைவாக நான் கூறுவது—கலைவாணர் கொடைவள்ளல்: அவரால் ஏற்றம் பெற்ற பொது நிலையங்கள் பற்பல; அவர் நடித்த படங்கள் நூற்றுக்குமேலுண்டு. தென்னிந்திய நடிகர் சங்கத்தினர் அந்த நூறு படங்களிலுமுள்ள முக்கிய கட்டங்களை சிறிது சிறிதாகத் தொகுத்து இறுதி யாத்திரையின்போது எடுக்கப்பட்ட திரைப் படத்தையும் இணைத்து,

(4-ம் பக்கம் பார்க்க)

நங்கவரத்தில் போலீஸ் அடக்குமுறை வேகம்

40 தாய்மார்கள் உள்பட 107 பேர் கைது

கண் கலங்கி முறையிட்ட தாய்மார்களுக்கு அச்சுறுத்தல்

அதிகாரிகளின் மிரட்டல் மிகுந்த பேச்சைக் கண்டு தோழர்களின் வியப்பு

'அமைதி வழி நடப்போம்; எதையும் தாங்கச் சித்தமாயுள்ளோம்' என தலைவர்கள் அறிவிப்பு

[நமது நிருபர் 'டிரங்க்' செய்தி]

திருச்சி, செப். 5—

வயிறு காய்ந்து, வேலைசெய்ய நிலமின்றி, கண்ணீருங் கம்பலையுமாய் வேதனை உருவமாய் நிற்கின்ற ஏழை உழவனை அடக்குமுறைக்குப் பலியாக்கி அவன் உரிமைக்குரலை ஒடுக்கிவிடலாமென்று அரசினரும், அதிகாரிகளும் தீர்மானித்துவிட்டதுபோல் நங்கவரத்தில் நடவடிக்கைகள் ஆரம்பமாகிவிட்டன.

இதுவரை நடைபெற்ற அறப்போரில் 40 தாய்மார்கள் உட்பட மொத்தம் 107 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இன்று நடைபெற்ற போராட்டத்தில் மொத்தம் 60 பேர் காலை 10 மணிவரை கைது செய்யப்பட்டனர்.

இன்றைய அறப்போரில் தாய்மார்கள், நால்வர் நால்வராக அணிவகுத்துக் களம் புகுந்து கைதாகியுள்ளனர்.

தோழர்கள் குளித்தலை முத்துகிருட்டிணன், கவுண்டன்பட்டி முத்து, துறையூர் ஆதிமூலம் ஆகியோர் இன்றைய அறப்போரில் முன்னின்று அமைதியாகவும், கட்டுப்பாடு குலையாமலும் மேற்பார்வையிட்டுக் காரியங்களைக் கவனித்துள்ளனர்.

மிராசுதாரரின் ஏவலாளர்கள் 100 பேர், இன்று களத்தில் புகுந்து தாய்மார்களைத் தடைபடுத்தியுள்ளனர்.

4-ந் தேதியன்று:

4—9—57 மாலையில், பண்ணையார், உழவர்களிடையே சமரசம் காணுவதற்கான பேச்சுவார்த்தைகள் நடத்துவதாகவும் அதில் அதிகாரிகள், பண்ணையார்கள், விவசாயிகள், முன்னேற்ற சங்கத் தலைவர்கள் கலந்துகொள்வதாயும் இருந்தது.

ஆனல் நேற்று காலை பண்ணையாரின் ஆட்கள் (வெளியூரிலிருந்து கூலிக்காகக் கொண்டு வரப்பட்டவர்கள்), உழுதிருந்த நிலங்களில் விதை தெளிக்க ஆரம்பித்தார்கள்.

அதைக் கண்ட உழவர்கள், அவர்களிடம் சென்று, 'இன்று சமரசம் பேசப் போகிறார்கள்; அதற்குள் நீங்கள் விதை தெளிப்பது நியாயமா?' என்று கேட்கவே, அதற்கு அவர்கள் சரியான பதில் கூறாமல் உழவர்களை மிரட்டியிருக்கிறார்கள்.

உழவர்களும் வழக்கம்போல அவர்களை, 'வயலில் இறங்க வேண்டாம்—நாங்கள் பாடுபட்டு வயிறு வளர்க்கும் நிலத்தில் நீங்கள் இறங்கித் துரோகம் செய்யாதீர்கள்' என்று அமைதிவழி அறப்போர் நடத்தவே, உடனே போலீசார் விரைந்து உழவர்கள் 23 பேரைக் கைது செய்து கொண்டு போயினர்.

அது கண்ட தாய்மார்கள், 'எங்களையும் சிறைக்கு அழைத்துச் செல்லுங்கள்' என்று கண்கலங்கப் போலீசாரிடம் முறையிட்டுக்கொண்டனர்.

இது வரை உழவர்களிடம் அனுதாபம் காட்டுவதுபோல் நடித்து, இப்போது பண்ணையாருக்குப் பாதுகாப்பளித்து உழவர்மீது அடக்குமுறையைக் கட்டவிழ்த்து விட முடிவுகட்டியுள்ள போலீசார், தாய்மார்களை இகழ்ந்துரைத்து, உழவர்களை எச்சரித்து, தொடர்ந்து நாளை அறப்போர் நடத்தினுல் கண்ணீர்ப்புகை, தடியடி, துப்பாக்கிப் பிரயோகம்வரை நடக்கும் என்றும் பயமுறுத்திச் சென்றிருக்கிறார்கள்.

மாலையில் சமரசம் பேசுவதற்காகக் குறிப்பிட்ட நேரத்தில் சென்ற மாவட்ட தி. மு. க. செயலாளர் அம்பில் தர்மலிங்கம், விவசாயிகள் முன்னேற்ற சங்கத் தலைவர்கள் டி. வி. முத்துகிருஷ்ணன், கவுண்டம்பட்டி முத்து ஆகியோர், அதிகாரிகளின் அலட்சியம் கலந்ததும், மிரட்டல் மிகுந்ததுமான பேச்சைக் கண்டு வியப்படைந்து, 'உழவர்களுக்குப் பாதுகாப்பு அளிக்கும் எண்ணம் உங்களுக்கு இல்லையோ? எனக் கேட்டனர்.

அதற்கு அதிகாரிகள், 'இல்லை; நாங்கள் பண்ணையாருக்கே பாதுகாப்பு அளிக்கமுடியும்' எனத் திட்டவட்டமாகக் கூறியதோடு, போலீஸ் நடவடிக்கைகள் இன்னும் தீவிரமாகும்' என்று எச்சரித்துள்ளனர்.

"அமைதி வழி அறப்போர் நடத்துகிற நாங்கள் எதையும் தாங்கிக்கொள்ளச் சித்தமாயிருக்கிறோம்.

எனக் கூறிவிட்டுத் தலைவர்கள் திரும்பினர்.

5—9—57 காலையில் உழவர்கள், வழக்கம்போல், நிலத்தில் இறங்கி பாடுபடும் அறப்போரில் ஈடுபடுவர்.

குறிப்பு:—அறப்போர் ஆரம்பமாகி நாலைந்து நாட்கள் வரையிலிருந்து சமரச முயற்சிகளில் ஈடுபட்ட போலீஸ் டிப்டி சூப்பிரண்டெண்டு இப்போது மாற்றப்பட்டு, வேறு ஒருவர் அந்தப் பதவிக்கு வந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

தமிழ்நாட்டின் எதிர்ப்புக்குப் பணிவு!

'சுதந்தரப் பயணம்' திரைப்படம் திரும்பப் பெறப்பட்டு விட்டது

அவசியமான திருத்தங்களுக்குப் பின்னர்தான் நாடு முழுமையிலும் திரையிடப்படும்

இந்தியச் சுதந்தரத்திற்காக தென்னுட்டு மக்கள் செய்த சேவைகளையும், புரிந்த தியாகங்களையும் அடியோடு புறக்கணித்து, முற்றும் வடநாட்டு நிகழ்ச்சிகளையே கொண்டு தயாரிக்கப்பட்ட 'சுதந்தரப் பயணம்' என்ற செய்திப் படத்துக்கு, தென்னுட்டில் பலத்த எதிர்ப்பு கிளம்பியதைக் கண்டு, இந்திய அரசாங்கம் இப்போது பணிந்துவந்திருக்கிறது.

இந்திய அரசாங்க செய்தி—ஒலி பரப்பு இலாகாவின், திரைப் படப் பிரிவினுல், அப்படம் உடனடியாகத் திரும்பப் பெறப் பட்டது.

அப்படத்தில் தேவையான திருத்தங்கள் செய்யப்படுமென்றும், அதன் பிறகே அது மீண்டும் நாடு முழுவதிலும் திரையிடப்படுமென்றும் செய்திப் படப் பிரிவு மக்கள் தொடர்பு அதிகாரி தெரிவித்திருக்கிறார்.

அந்தப் படம், இந்திய சுதந்தர நூற்றுண்டு விழாவையொட்டி இந்திய அரசாங்க செய்தி - ஒலி பரப்பு இலாகா திரைப்படப் பிரிவினுல் 2,000 அடி நீளத்தில் தயாரிக்கப்பட்டதாகும்; அது, கடந்த ஆகஸ்டு 15-ந் தேதியன்று நாடெங்கும் வெளியிடப்பட்டது.

அந்தப் படத்தைக் கண்ட தென்னுட்டு மக்கள் மனம் குமுறினர். நாடெங்கும் கண்டனக் குரல்கள் எழுந்தன. பாராளுமன்றத்திலும் இதுபற்றி கண்டனம் தெரிவிக்கப்பட்டது.

நாளுக்குநாள் இக்குமுறல் வலுப்பெற்று வருவதைக் கண்ட பின்னரே, இந்தியப் பேரரசு, தென்னுட்டுக்குத் தான் இழைத்த துரோகத்துக்கு-அநீதிக்குக் 'கழுவாய்' தேடிக்கொள்ள முன்வந்திருக்கிறது.

மீண்டும் இப்படத்தைத் திருத்தி வெளியிட்டுவிடுவதன் மூலம் தென்னுட்டு மக்களின் கண்களைத் துடைத்துவிடலாமென அது கருதியிருக்கிறது.

****

கலைவாணர் என். எஸ். கே.

அனுதாபக் கூட்டம்

6—9—57 வெள்ளி மாலை 6-மணிக்கு

திருவல்லிக்கேணி கடற்கரையில்

★

பொதுச்செயலாளர்

இரா. நெடுஞ்செழியன்

அவர்கள் தலைமையில்

அண்ணா

அவர்களும், நடிப்பிசைப் புலவர் கே. ஆர். இராமசாமி, புரட்சி நடிகர் எம். ஜி. இராமச்சந்திரன், மற்றும் கழகச் சொற்பொழிவாளர்கள் பலரும் கலைவாணரின் நற்பணியைப் பற்றிய புகழுரை வழங்குவார்கள்.

★

மாலை 5-மணிக்கு கலைவாணரின் பாட்டல்கள் (இசைத் தட்டு) ஒலிபரப்பப்படும்.

—தி. மு. கழகம் (42-வது வட்டம்)

****

இந்தி திணிப்புக்கு எதிர்ப்பு

பச்சையப்பன் கல்லூரி மாணவர்கள் குமுறல்

சென்னை, செப். 5—

தென்னுட்டு மக்களின் விருப்பத்திற்கு மாருக, இந்திய அரசாங்கம் இந்தியைத் திணிக்க முனைந்திருப்பது கண்டு எங்கும் பலத்த எதிர்ப்பு உருவாகிவருகிறது; மாணவர் உலகமும் தன் தீர்ப்பை வெளிப்படுத்திவருகிறது.

மாணவர்கள் ஆங்காங்கு எதிர்ப்பைத் தெரிவித்து வருகின்றனர். இதுவரை தமிழ் நாட்டின் பல்வேறு கல்லூரிகளில் படிக்கும் மாணவர்கள் தங்கள் தாய்மொழிக்கும், நாட்டுக்கும் ஆபத்தான சூழ்நிலை உருவாகிவருவதை உணர்ந்து, சனநாயக அடிப்படையில் தங்களின் உறுதிப்பாட்டினைத் தெரிவிக்க முயன்றுள்ளனர்.

பச்சையப்பன் கல்லூரியைச் சேர்ந்த மாணவர்கள் நேற்று வகுப்புகளுக்குச் செல்லாமல், கல்லூரி வாயிலிலிருந்து அணிவகுத்து, கதிரவனின் வெப்பத்தையும் பொருட்படுத்தாமல், அமைதியாக முக்கிய தெருக்களின் வழியாக சுமார் 6 மைல் தூரம் சென்று, திருவல்லிக்கேணி கடற்கரையை அடைந்தனர்.

அவர்கள், 'வடவர் ஆதிக்கம் ஒழிக! இந்தியைத் திணிக்காதே!' என்ற வாசகங்கள் அடங்கிய விளம்பர அட்டைகளைக் கையில் ஏந்தி, வழி நெடுக முழக்கமிட்டுச் சென்றனர்.

கடற்கரையில் கூடிய அவர்கள் இந்தித் திணிப்பைக் கண்டித்து ஒரு தீர்மானம் நிறைவேற்றிய பின் அமைதியாகக் கலைந்தனர்.

இதில், 1000-க்கு மேற்பட்ட மாணவர்கள் பங்கு கொண்டனர்.

வாரத்துக்கு ரூ. 160!

லண்டன், செப். 4—

பிரிட்டனில் உடல் உழைப்பு மூலம் பணியாற்றும் தொழிலாளர்களுக்கு வாரம்தோறும் சராசரி தலைக்கு ரூ. 160 வருமானம் கிடைக்கிறது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

நம் நாடு
தி.மு.க. தினஇதழ் ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன்

சென்னை 5—9—57 வியாழன்

கொலைவினைக்குத் துணையா?

பல ஆண்டுகளுக்கு முன்பு நடந்த சம்பவம். சிந்து மாகாணத்தில் ஒரு கிராமம். சோகமே உருவான ஒரு குடியானவன் தன் இளம் மனைவியை வண்டியில் கிடத்தி ஆஸ்பத்திரிக்கு அழைத்து வந்தான். டாக்டர் கின்லாச் கிர்க் (Dr. Kinloch Kirk) என்ற ஆங்கிலேய வைத்தியர் அப்பெண்ணைப் பரிசோதித்தார். அவளால் எழுந்து நிற்கவும் முடியவில்லை. இரண்டு கால்களும் தங்கள் சக்தியை அடியோடு இழந்து சோர்ந்துபோய் தொய்ந்து கிடந்தன. பயங்கரமான பாரிசவாதம்! டாக்டர் உதட்டைப் பிதுக்கினர். அந்தோ! பரிதாபம்! தன்னுடைய பொன்னான வாழ்நாளை அந்த இளம் பெண், இனி படுத்தபடுக்கையாகவே பூமிக்குப் பாரமாக, பிணத்தைப்போல் கழிக்கவேண்டியதுதான்.

டாக்டர் கேட்டார்—'ஏனப்பா இந்த இளம் பெண்ணுக்குப் பாரிசவாதம் எப்படி வந்தது? உன்னால் ஏதாகிலும் காரணம் சொல்லமுடியுமா?'

வாலிபன் சொன்னான்—'எல்லாம் அந்தப் பாழாய்ப் போன கேசரிப் பருப்பினால் வந்த விபரீதம்தான். நாங்கள் ஏழைகள்; எங்களுக்கு மலிவாகக் கிடைக்கக்கூடிய பருப்புவகை, கேசரிப்பருப்பு ஒன்றுதான். கடந்த ஆறு மாதங்களாக என் மனைவி அதையே உபயோகித்து வந்தாள். அதன் பயங்கர விளைவுதான் இந்தப் பாரிசவாதம்.'

டாக்டர் சிந்தனையில் ஆழ்ந்தார்; கிராமம் கிராமமாகச் சென்று விசாரணை நடத்தி, ஆராய்ச்சிகள் செய்தார். வாலிபனின் கூற்று உண்மை எனக் கண்டார். கேசரிப் பருப்பை உண்பதினால் பாரிசவாதம் உண்டாகிறது என்ற உண்மை புலனாயிற்று.

★

கேசரிப் பருப்பு என வழங்கப்பட்டுவரும், ஒருவகைப் பருப்பை சமைத்து உட்கொள்வதினால் ஏற்படுகின்ற உடற்கோளாறின் தன்மையை மேற்குறிப்பிட்டுள்ள உண்மைச் சம்பவத்தின் மூலம் நாம் அனைவரும் அறிந்துகொள்ளுகின்றோம். அந்தச் சம்பவம், சென்னை அரசாங்கம் வெளியிட்டுவரும் 'மேழிச் செல்வத்'தில் காணப்படுகிறது.

எனவே, கேசரிப் பருப்பை இனி வாங்கக்கூடாது—அதைச் சமைத்துச் சாப்பிடவும்கூடாது என்று மேழிச் செல்வத்தில் வந்துள்ள மேற்படி கட்டுரையைப் படித்தவர்கள் தீர்மானித்துக் கொள்ளக்கூடும். ஆனால் மற்ற மக்களுக்கு அவ்வுண்மை தெரிவதற்கு வழிகிடையாது.

எனவே, சென்னை அரசாங்கம், 'கேசரிப்பருப்பை உண்ணாதீர்கள்' என்று பொதுமக்களை வேண்டிக்கொண்டு அறிக்கையொன்று வெளியிட்டிருக்கின்றது. அதுபோன்றே, அப்பருப்பை விற்காது இருக்க வேண்டும் என வியாபாரிகளையும் சென்னை அரசாங்கம் வேண்டிக்கொண்டிருக்கிறது.

இவ்வாறு வேண்டுகோள் விட்டுவிடுவதினால் கேசரிப் பருப்பை விற்றுவருவதை வியாபாரிகள் இனி கைவிட்டுவிடுவர் என சென்னை அரசாங்கம் நம்பிக்கைக் கொண்டிருப்பது போல், நம்மால் நம்ப முடியவில்லை. நச்சுப் பருப்பையே நமது வியாபாரிகளுக்குக் கிடைக்காமல் தடை செய்தால் அல்லாது, அப்பருப்பை விற்பதிலிருந்து நமது வியாபாரிகள் விலகமாட்டார்கள் என்பது நிச்சயம்.

அவ்வாறு தடை விதிக்க வேண்டுமானால், கேசரிப் பருப்பை உற்பத்திச் செய்வதையே ஒரேயடியாகத் தடுத்தாகவேண்டும். அவ்வாறு விதிக்கப்படுகின்ற தடை எந்த அளவு செயலாற்றப்பட்டு வருகிறது என்பதை அரசாங்கத்துறையினர் மிகவும் விழிப்புடன் கண்காணித்து வரவேண்டும். அதுவுமன்றி, தடையை மீறி கேசரிப் பருப்பை பயிரிடுகிறவர்களைக்கடுமையாகக்கண்டிக்கவும் அரசாங்கம் துணியவேண்டும்.

அப்பொழுதுதான் கேசரிப் பருப்பை வியாபாரிகள் விற்காமல் ஒழிவதும், பொது மக்கள் அதை வாங்கி உண்டு உடற்கேட்டை வலியத் தேடிக் கொள்ளாமல் இருப்பதும் எதிர்பார்க்கமுடியும். அதில்தான் அரசாங்கத்தின் பொறுப்பும் கடமையும் அமைந்திருக்கின்றன.

கேசரிப் பருப்புக்கு வட்டப் பருப்பு என ஒரு பெயரும் உண்டு. அந்த நச்சுப் பருப்பு நிறத்தில் இளஞ்சிவப்புடன் கூடிய மஞ்சளாக இருக்கும். உருவத்திலும் துவரம்பருப்பை விடக் கொஞ்சம் மாறுதலாகக் காணப்படும்.

அப்பருப்பை உட்கொள்ளுவோரின் குடலையும், நரம்புகளையும் தாக்கும் ஒருவகை நஞ்சு அக்கேசரிப் பருப்பில் இருக்கிறது. 'இதைக் குறைந்த அளவில் எப்பொழுதோ ஒருமுறை உபயோகித்தால் வயிற்று வலியும் ஜீரணக் கோளாறுகளும் ஏற்படும். இதையே முக்கிய உணவாக நீண்டகாலம் உட்கொண்டால் பயங்கரமான பாரிசவாதம் உண்டாகிறது. இருந்தாற்போல் இருந்து இரண்டு கால்களும் திடீரென்று பலமிழந்து சோர்ந்துபோய் துவண்டுவிடும். இந்தப் பயங்கர வியாதியைக் குணப்படுத்த இதுவரையிலும் எந்தச் சிகிச்சையும் பயன்படவில்லை. ஆகவே, எஞ்சியுள்ள வாழ்நாள் முழுவதும், படுத்த படுக்கையாகக் கிடந்து நரக வேதனையை அனுபவிக்க வேண்டியதுதான்.'

கேசரிப் பருப்பை உட்கொள்ளும் பெண்களைவிட ஆண்களையே இந்தக் கொடிய நஞ்சு பலமாகத் தாக்குகிறது. இப்பருப்பை உண்ணும் கால்நடைகளும் பாரிசவாதத்தினால் தாக்குறுகின்றன.

மக்களைக் கொல்லாமல் கொல்லும் இக்கேசரிப் பருப்பு, நமது தமிழ் நாட்டில் அதிகமாகப் பயிர் செய்யப்படுவது கிடையாது. உத்தரப்பிரதேசம், மத்தியப் பிரதேசம், பம்பாய் ஆகிய மூன்று மாநிலங்களிலும்தான் இது மிகுதியாகப் பயிர் செய்யப்பட்டுவருகிறது.

நமது வியாபாரிகளுக்கும் இக்கேசரிப் பருப்புக்கும் உள்ள தொடர்பை 'மேழிச் செல்வம்' குறிப்பிட்டிருக்கிறது. அது, இது:—

"நஞ்சிலும் கொடிய இந்த நச்சுப் பருப்பை நம் மாகாணத்தில் அவ்வளவு அதிகமாகப் பயிர் செய்வதில்லையென்றாலும், வியாபாரிகள் பலர் இதைப் பிற மாகாணங்களில் இருந்து தருவித்து, பல புதுப் பெயர்களைச் சூட்டி மலிவான விலைக்கு விற்பனை செய்கிறார்கள். அல்லது பாலில் விஷத்தைக் கலப்பது போல, துவரம் பருப்பு, கடலைப் பருப்பு முதலியவற்றோடு கலந்து விற்று கொள்ளை இலாபத்தோடு பழியையும், பாபத்தையும் சம்பாதிக்கிறார்கள்; பொதுமக்களும் ஏமாறுகிறார்கள்."

கேசரிப் பருப்பை இனம் கண்டுகொள்ளுவது எப்படி என்பது குறித்து 'மேழிச் செல்வம்' குறிப்பிட்டிருக்கிறது. அது, இது:—

"கேசரிப் பருப்பு தோற்றத்திலும் வாசனையிலும் கடலைப் பருப்பு, துவரம் பருப்பு முதலியவற்றை ஒத்திருந்தபோதிலும், இதை வாயிலிட்டு மென்றால் ஒருவிதக் கசப்பு வாயைப் பிடித்துக்கொள்ளும். இதன் மூலம் கேசரிப் பருப்பை இனம் கண்டுகொள்ளலாம்."

கேசரிப் பயிறு, பருப்பு, மாவு முதலியவற்றை சென்னை மாநிலத்திற்குள் கொண்டுவரக்கூடாது என்று, கலப்படத் தடைச் சட்டங்களின் மூலம் சென்னை அரசாங்கம் தடை விதித்திருக்கின்றது. இருந்தாலும், அந்த நஞ்சு வடநாட்டிலிருந்து சென்னை மாநிலத்திற்குள் கள்ளத்தனமாக இறக்குமதி செய்யப்பட்டு, இங்கு விற்கப்பட்டும் வருகிறது. அதைப் பார்த்து, சென்னை அரசாங்கம் வேண்டுகோளும் விட்டிருக்கிறது.

கேசரிப் பருப்பை உற்பத்திச் செய்யாமல் ஒரேயடியாகத் தடுக்கவேண்டியதுதான் இனி அரசாங்கம் செய்யவேண்டிய ஒரே ஒரு பணியாக இருக்கிறது. மத்தியப் பிரதேசத்திலும், உத்தரப் பிரதேசத்திலும் உற்பத்திச் செய்யப்பட்டு வரும் கேசரிப் பருப்பை, அவ்வாறு விளைவிக்கக்கூடாது எனத் தடை விதிக்க நமது சென்னை அரசாங்கத்திற்கு அதிகாரமில்லை. இந்தியப் பேரரசுதான், இதில் கருத்துச் செலுத்தி, ஆவன செய்ய முன்வரவேண்டும்.

மக்களைக் கொடிய நோய்க்காளாக்கி, பாடுபட விடாமல் படுக்கையில் தள்ளி, சாகடிக்கும் வகையில் மீளாத் துன்பத்தில் மூழ்கடித்துவரும் கேசரிப் பருப்பு உற்பத்திக்கு இதுவரை இந்தியப் பேரரசு தடை விதிக்க எண்ணாததும் முன்வராததும் விந்தையாகத்தான் இருக்கிறது. எல்லாவற்றிலும் மேற்கொள்ளுவது போல், இதற்கும் ஒரு ஆய்வுக் குழுவை நியமிக்க நினைக்காது, உடனடியாக கேசரிப் பருப்பு உற்பத்தியைத் தடுத்து நிறுத்த இந்தியப் பேரரசு முன்வருமா?

நடப்பு ஆண்டில், இந்தியாவில் மொத்தம் 50,22,000 ஏக்கராவில் கரும்பு பயிரிடப்பட்டிருக்கிறதென்று தெரியவருகிறது.

'நெய்வேலி நிலக்கரி: ஜெர்மனியின் உயர்ந்த ரகத்திற்கு ஈடானது'

'தண்ணீர் ஊற்றுக்களைச் சமாளிப்பதற்குத் தக்க மார்க்கமிருக்கிறது'

மேல்நாடு சென்று தாயகம் திரும்பியவர் தரும் தகவல்

அண்ணாமலைநகர், செப். 1—

மத்திய அரசாங்கத்தின் தாராள சிந்தையுடன் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இடம்பெற்றுள்ள ஒரே ஒரு தென்னாட்டின் பெரிய திட்டமான நெய்வேலி நிலக்கரித் திட்டம்பற்றி இடை இடையே எழுப்பப் பட்டு வந்துள்ள சந்தேகங்களை அகற்றி, நம்பிக்கையூட்டும் செய்திகள் வருகின்றன.

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் இரசாயன—பொறியியல் விரிவுரையாளரான டாக்டர் எஸ். எம். இலக்குமணன், கடந்த நான்கு ஆண்டுகளாக மேல்நாடுகளில் சுற்றுப் பயணம் செய்து தாயகம் திரும்பியுள்ளார்.

அவர் ஜெர்மனி, இங்கிலாந்து, அமெரிக்கா போன்ற நாடுகளுக்குச் சென்றிருக்கிறார்.

அவர் ஜெர்மனியில் நடத்திய ஆராய்ச்சியைப்பற்றிய சில தகவல்களை வெளியிட்டுள்ளார். நெய்வேலி நிலக்கரி ஜெர்மனியில் கிடைக்கும் பழுப்பு நிலக்கரிக்கு ஈடானது என்று அவர் ஒரு பேட்டியில் கூறியுள்ளார்.

"தென்னாட்டில் நெய்வேலியில் கிடைக்கும் நிலக்கரி நிச்சயமாக நாட்டின் தொழில் முன்னேற்றத்திற்கு வேகமாக உதவி புரியும் என்பதில் ஐயமில்லை"

என்று அவர் உறுதியாகக் கூறியுள்ளார்.

நெய்வேலியில் பழுப்பு நிலக்கரி வெட்டியெடுக்கப்படும்போது, மண்ணுக்சடியிலிருந்து வேகமாக தண்ணீர் பெருக்கெடுத்து வேலையைத் தடைப்படுத்துவது பற்றி கேட்டபோது, டாக்டர் இலக்குமணன், நம்பிக்கையூட்டும் செய்தியை வெளியிட்டுள்ளார்.

ஜெர்மன் நாட்டிலும் சில இடங்களில் நிலக்கரிக்கு அடியில் தண்ணீர் ஊற்றுக்கள் இருக்கின்றன என்றும், இருந்தும் அந்த நாட்டில் தடைப்படுத்தும் தண்ணீரை அப்புறப்படுத்தி நிலக்கரி தோண்டப்படுகிறது என்றும் கூறினார்.

'அது எப்படி செய்யப்படுகிறது?' என்று கேட்டதற்கு, 'ஒரு சுரங்கத்தில் நிலக்கரி எடுக்கப்படும்போது, அடுத்த சுரங்கத்தில் உள்ள தண்ணீர் அப்புறப் படுத்தப்படுகிறது' என்றும், 'இதனால் தண்ணீர் வேகம் குறைந்து சாதாரண மட்டத்திற்குச் செல்கிறது' என்றும், 'இதனால் இக்கட்டின்றி நிலக்கரி தோண்டி எடுக்கப்படுகிறது' என்றும் கூறினர்.

ஜெர்மனியில் தோண்டப்படும் நிலக்கரி உடனே உலக்கு அனுப்பப்படுகிறதாம்.

'நெய்வேலியில் கிடைக்கும் நிலக்கரியில் இரண்டு வகைகள் உள்ளன; இரண்டையும் முதலில் வேறுபடுத்திய பிறகே உலக்கு அனுப்புவது அவசியம்' என்றும் அவர் தன் கருத்தை வெளியிட்டுள்ளார்.

குந்தா திட்டம் ஆரம்பமாகிவிட்டது

ரூ. 520 இலட்சம் செலவாகும்

உதகை, செப். 4—

1929 முதல் பைகாரா நீர்வீழ்ச்சி மின்சாரத் திட்டத்தில் அனுபவம் பெற்ற பழைய ஊழியர்களைக் கொண்டு, நீலகிரி மாவட்டத்தில் குந்தா ஆற்றின்மீது இரண்டு அணைகள் கட்டுவதற்கான வேலை துவக்கப்பட்டுள்ளது.

குந்தா ஆற்றின் உப-நதிகளான எமரல்ட் குறுக்கேயும், அவலான்சி குறுக்கேயும் அணை கட்டப்படுமாம்.

இதற்கு மொத்தம் ரூ. 520 இலட்சம் செலவிடப்படுமாம்.

அவலான்சி அணை, 1,200 அடி நீளமும் 186 அடி உயரமும் 3,60,000 கெசம் கன பரிமாணமுமுள்ள கட்டிட வேலையுடன் கூடியதாம்.

எமரல்ட் அணை, 1,060 அடி நீளமும், 212 அடி உயரமும், 4,20,000 கெசம் கன பரிமாணமுமுள்ள கட்டிட வேலையுடன் கூடியதாம்.

இந்த இரண்டு அணைகளும் கட்டிமுடித்த பின்னர் குந்தா பாளம் நீர் மின்சாரத் திட்டத்திற்கும், பெகம்பு அல்லர் நீர மின்சாரத் திட்டத்திற்கும் 5,500 மில்லியன் கன அடி தண்ணீர் வசதியை ஏற்படுத்தும் என்றும், மின்சார உற்பத்திக்கான தண்ணீர் இடைவிடாது கிடைக்கும் என்றும் கூறப்படுகிறது.

மீன் எண்ணெய்த் தொழிற்சாலைகள்

நாகை, தூத்துக்குடியில் ஏற்படும்

சென்னை, செப். 3—

1957—58-ல், நாகப்பட்டினத்திலும், தூத்துக்குடியிலும் மீன்தான், மீன் எண்ணெய் தொழிற்சாலைகளை நிறுவ அரசாங்கம் அனுமதித்திருக்கிறது. இந்தத் தொழிற்சாலைகளுக்கு ரூ. 60,000 செலவாகும். இந்தத் தொழிற்சாலைகளுக்குத் தகுந்த கட்டிட வசதி செய்ய தனியாக ரூ. 60,000 ஒதுக்கப்பட்டிருக்கிறது. நடைமுதல் செலவுகள் சுமார் ரூ 47,000 ஆகும், உற்பத்தி செய்யப்பட்ட பொருள்கள்மூலம் சுமார் ரூ. 52,000 வருவாய் கிடைக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

கள்ளக் கடத்தல்காரர்கள்

வடநாட்டில் 208 பேர் கைது

புதுடில்லி, செப். 4—

அமிர்தசரசு பகுதியில் தங்கம், மற்றும் இந்திய நாணயங்களை, கள்ளத்தனமாகக் கடத்தும் வேலையில் ஈடுபட்டதாக மொத்தம் 208 பேர் கைது செய்யப்பட்டுள்ளனராம். இவர்களில் 23 பேர் அந்நிய நாட்டினராம்.

ஆமதாபாதில் மொத்தம் 25,160 தோலா எடையுள்ள தங்கம் கள்ளக் கடத்தல் பேர்வழிகளிடமிருந்து கைப்பற்றப்பட்டதாம்; இதன்மதிப்பு ரூ.26 இலட்சமாம்.

வளரும் வடக்கில்!

ரூ. 38·37 கோடி செலவில் மற்றொரு திட்டம்

புதுடில்லி, செப். 4—

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ் உத்தரப்பிரதேச மாநிலத்தில் 10 நீர்ப்பாசன, பலதுறைத் திட்டங்களுக்காக மொத்தம் ரூ. 22·90 கோடி ஒதுக்கப்பட்டுள்ளதாம்.

இந்தத் திட்டங்களுக்கு மொத்தம் ரூ. 38 37 கோடி செலவாகும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

இந்தத் திட்டங்கள் முடிந்ததும் 15·59 இலட்ச ஏக்கர் நிலத்திற்கு நீர்ப்பாசன வசதி கிடைக்குமாம்.

இராமகங்கா நதி குறுக்கே அணை கட்டுவதே மிகவும் முக்கியமான திட்டமாம்; இதற்கு ரூ. 16·99 கோடி செலவிடப்படுமாம்!

‘கிராமப்புற மக்களும் அரசியல் அறிவுபெற தி. மு. க. பணியாற்றும்’

சிதம்பரம் வட்ட நிகழ்ச்சிகளில் அண்ணா

சிதம்பரம், ஆக. 30—

25—8—57 மாலை 6-30 மணியளவில் அண்ணா அவர்கள் சிதம்பரத்தையடுத்த புவனகிரி வெள்ளாற்றுப் பாலத்திற்கருகில் வந்து சேர்ந்தவுடன் ஆயிரக்கணக்கான பொதுமக்களும், கட்சித் தோழர்களும் பெருத்த ஆரவாரத்தோடு வரவேற்ருர்கள்.

தோழர்கள் தில்லை வில்லாளன், சக்கரவர்த்தி, இரத்தின பாலகுருசாமி, சொக்கலிங்கம், புவனகிரி கோவிந்தசாமி, அண்ணாமலைநகர் சோமசுந்தரம், சிதம்பரம், வழக்கறிஞர் வி. வி. சாமிநாதன், மற்றும் பலரும் கூடியிருந்து வரவேற்ருர்கள்; அண்ணாவுடன், தோழர்கள் பொன்னுவேல், காஞ்சி-பூஞ்சோலை ஆகியோர் வந்திருந்தனர்.

குச்சிப்பாளையம்:

அண்ணா அவர்களை குச்சிப்பாளையம் பஞ்சாயத்து போர்டு தலைவர் திரு. நடராச (உடையார்), மற்றும் உறுப்பினர்களும், கழகத் தோழர் தேவன், வடகிரி ராசபுரம் இராமகிருட்டிணன் முதலானேரும் வரவேற்ருர்கள்.

முதலில், தி. மு. கழகத்திற்கென ரூ. ஆயிரத்திற்குமேல் செலவு செய்து கட்டப்பட்ட கட்டிடத்தைத் திறந்துவைத்தார்கள். பிறகு ஊர்வலமாக, வாழ்த்து முழக்கங்களோடு, அண்ணா அவர்களை, பொதுக்கூட்ட மேடைக்கு அழைத்துவந்தார்கள்.

முதலில் பஞ்சாயத்து போர்டு வரவேற்பு நடைபெற்றது.

அதன்பிறகு வழக்கறிஞர் தோழர் வி. வி. சாமிநாதன் தலைமை வகித்து, ‘கழக வேலைகளில் இடையில் சிலகாலம் நான் கலந்து கொள்ளாமலிருந்தாலும், இனி தொடர்ந்து பணியாற்றுவேன்’ என்றுகூறி தன் உரையை முடித்துக்கொண்டார்.

பின்னர், தோழர் தில்லை வில்லாளன் சிறிதுநேரம் பேசினர்.

இறுதியில் அண்ணா அவர்கள் பேசுகையில், கிராமப்புறங்களிலும் இன்று அரசியல் விழிப்புணர்ச்சி ஏற்பட்டுள்ளதென்றும், ‘இராமன் ஆண்டாலென்ன, இராவணன் ஆண்டாலென்ன?’ என்ற அலட்சியப்போக்கு மாறிவிட்டதென்றும், தி. மு. க. இனி கிராமங்களுக்குச் சென்று, அவர்களையும் ஜனநாயக அமைப்பில் பங்குபெறும் அரசியல் அறிவுபெறச் செய்யும் என்றும் குறிப்பிட்டார்.

கழகச் செயலாளர் நன்றி செலுத்தினர்.

சாக்கான்குடி:

வரும்வழியில் சாக்கான்குடி தி. மு. கழகச் சார்பில் கழகக் கொடியை அண்ணா ஏற்றிவைத்தார்; அண்ணாவுககு மாலை அணிவித்து வழியனுப்பினர்.

கீரப்பாளையம்:

இரவு 7-30 மணியளவில், பஞ்சாயத்து போர்டு வரவேற்புக் கூட்டம் பஞ்சாயத்து போர்டு தலைவர் திரு. கோ. இராமசாமி தலைமையில் நடந்தது. தலைவர் வரவேற்றுப் பேசி, பத்திரத்தையும் படித்துக் கொடுத்தார்.

அண்ணா அவர்கள், பஞ்சாயத்து போர்டுகளுக்கு, அதிக அதிகாரங்கள் வழங்கவேண்டியது என்பதைத் தாம் ஒப்புக்கொள்வதாகவும், பஞ்சாயத்து போர்டு உறுப்பினர்கள், எம். எல். ஏ-க்களை விட பொறுப்போடும், பயத்தோடும் பணியாற்றவேண்டிய சூழ்நிலையில் உள்ளார்கள்; ஏனெனில், அவர்கள் நாள்தோறும் வாக்காளர்களைச் சந்திக்கிருர்கள் என்பதாகவும், அத்தகைய பொறுப்புவாய்ந்த மக்கள் பிரதிநிதிகளுக்கு அதிகாரம் ஏன் தரப்படக்கூடாது என்பதாகவும், தாம் சட்டசபையில், சந்தர்ப்பம் வரும்பொழுது இதுகுறித்துப் பேசுவதாகவும் கூறி, வரவேற்புக்கு தக்க முறையில் பதிலளித்தார்கள்.

தில்லைவிடங்கன்:

இரவு 8-30 மணிக்கு தில்லைவிடங்கன் பஞ்சாயத்து போர்டார் அண்ணா அவர்களுக்கு வரவேற்புரை படித்துத் தந்தார்கள். பிறகு விருந்தும் நடத்தினர்.

கீழச்சாவடி:

கீழச்சாவடி கழகத் தோழர்கள், அண்ணா அவர்களுக்கு மாலை அணிவித்து வழியனுப்பினர்.

கிள்ளை:

இரவு 9-15 மணிக்கு கிள்ளை பஞ்சாயத்து போர்டார், அண்ணா அவர்களுக்கு வரவேற்புரை படித்துத் தந்தார்கள்; அதனைப் பெற்றுக்கொண்டு, அண்ணா அவர்கள் நன்றி தெரிவித்துககொண்டார்கள்.

சந்தைதோப்பு:

இரவு 9-30 மணிக்கு, சந்தைத் தோப்பில், கிள்ளை தி. மு. கழகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த பொதுக்கூட்டத்திலும் கலந்துகொண்டார்கள்.

தோழர்கள் என். சீவரத்தினம், தில்லை வில்லாளன் ஆகியோர் பேசினர்.

பின்னர் அண்ணா அவர்கள், கழகம் எங்கும் தழைக்க, கிராமத்தார் ஒத்துழைக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, கழகத்தின் அடிப்படைக் கொள்கைகளை விளக்கிப் பேசினர்கள்.

சிதம்பரம்:

இரவு 9-45 மணிக்கு சிதம்பரம் டவுன் ஹால் மைதானத்தில் இருபதினாயிரம் மக்களுக்குமேல் கூடியிருந்தனர்; மைதானம் நிறைந்து வீதிகளிலும் மக்கள் திரண்டிருந்தனர்.

தோழர் இரத்தின பாலகுருசாமி தலைமை வகித்தார்.

புலவர் ஆறுமுகம், சொக்கலிங்கம், பொறையார் ஜம்பு, செல்வராஜ் எம். எல். ஏ. ஆகியோர் பேசினர்.

காலம் தாழ்ந்துவந்தும், மக்கள் திரள் ஆவலோடு காத்திருந்து, அண்ணா அவர்கள் கூட்டத்தின் மேடைக்கு வந்ததும் பெருத்த ஆரவாரம் செய்து வரவேற்றனர்.

பிறகு, தோழர் தில்லை வில்லாளன், ‘காலம் அதிகமாகிவிட்டது; ஏனெனில், காலையிலிருந்து நடைபெற ஏற்பாடாகியிருந்த கூட்டங்கள், நிகழ்ச்சிகள் எல்லாம் இரவு 7 மணிக்குமேல் தொடங்கி நடத்த வேண்டியதாகிவிட்டது; எப்பொழுதும் பசித்துச் சாப்பிட்டாலே ருசிக்கும்; அதுபோல், காத்திருந்து கேட்டாலே பேசசு இனிககும்; காலதாமதத்தை அண்ணா அவர்கள், தமது பேசசின காலநீளத்தாலே ஈவாத்திகக வேண்டுகிறேன்’ என்று கூறி, அண்ணா அவர்களைப் பேசுமாறு வேணடினர்.

அண்ணா அவர்களுக்கு சிதம்பரம் வட்ட தி. மு. க. கிளைகள் அத்தனையும் கைத்தறி ஆடைகளும், மலர்மாலைகளும் அணிவித்தும, அண்ணாவின் தேர்தல் வெற்றிக்காகப் பாராட்டும் தெரிவித்தன.

அண்ணாமலைநகர் தி. மு. க. மாணவர் கிளை அளித்த வரவேற்பு இதழ் குறிப்பிடத்தக்கதாக இருந்தது. அது ஏறத்தாழ 3’×2’ அளவில் அமைந்திருந்தது எல்லோரையும் வியப்பிலாழ்த்திவிட்டது.

பிறகு அண்ணா அவர்கள் தி. மு. கழகம் வளரும்வகை, ஆற்றும் பணி, குறை கூறுவோர் போக்கு, ஆட்சியாளரின் நிலை முதலியவைகளை விளக்கிப் பேசினர்.

செயலாளர் சக்கரவர்த்தி நன்றிகூற கூட்டம் இனிது முடிந்தது.

அண்ணாமலைநகர் தி.மு.க. மாணவர் கிளை அலுவலகத் திறப்புவிழா

செங்கழநீர் பிள்ளையார் கோவில் தெருவில் அமைக்கப்பட்ட மேற்படி அலுவலகத்தை அண்ணா அவர்கள் திறந்துவைத்து, கொடியும் ஏற்றிவைத்தார். தோழர் சோமசுந்தரம், கட்டிட உரிமையாளர், மற்றும் மாணவர் தோழர்கள் பலரும் அண்ணாவை வரவேற்றனர்.

அண்ணாமலைப் பல்கலைக் கழக விடுதியில் சேர்க்கப்படாமல் தொல்லைக்காளான மாணவர்கள் சார்பில் உண்ணாவிரதமிருந்த நானகு மாணவத் தோழர்களையும் அண்ணா கண்டு பேசினர்.

பெயரிடு விழா

25—8—57 இரவு 12 மணிக்கு தூரவடித் தெரு, திரு, இராதாகிருட்டினன் குழந்தைக்கு, ‘அழகு பாண்டியன்’ என்று பெயரிட்டார்; அவர் இல்லத்தில் இரவு விருந்து நடந்தது.

தோழர் மாணிக்கம் அவர்கள் குழந்தைக்கு ‘செந்தாமரை’ என்று அண்ணா பெயர்சூட்டினர்.

26—8—57 காலை 9 மணியளவில் அண்ணா அவர்களால் படுகை குழந்தைவேலு அவர்களால் சிதம்பரம் இரயிலடி தெருவில் கட்டப்பட்ட கட்டிடத்திற்கு ‘எழிலகம்’ என்று பெயரிட்டார்கள். அண்ணா அவர்களுக்குக் கைத்தறி ஆடைகள் அணிவித்து, தேநீர் விருந்தும் அளிக்கப்பட்டது.

கூட்டுறவு நூற்பு ஆலை

திருவில்லிபுத்தூரில் ஏற்படுமாம்

சென்னை, செப். 4—

இராமநாதபுரம் மாவட்டத்தில் திருவில்லிபுத்தூரில் கூட்டுறவு முறையில் ஒரு நூற்பு ஆலையை ஏற்படுத்த மத்திய அரசாங்கம் அனுமதியளித்துள்ளதாம்.

இந்த ஆலையில் 12,000 கதிர்கள் இயங்கக்கூடுமென எதிர்பார்க்கப்படுகிறது.

காங்கிரஸ் சனநாயகம் சந்தி சிரிக்கிறது!

உறுப்பினர்கள் கண்டனம்; நேரு மழுப்பல்

புதுடில்லி, செப். 3—

அனைத்திந்தியக் காங்கிரசுக் கமிட்டியின் செயற்குழுக் கூட்டத்தில் பண்டித நேரு, காங்கிரஸ் கையாளும் சனநாயக முறைபற்றி உறுப்பினர்கள் சிலர் கூறிய நற்கருத்துக்களுக்கு ஆதரவளிக்க மறுத்துள்ளார்.

அவர், காங்கிரஸ் இன்று மக்களிடையே மதிப்பிழந்துவிட்டது என்பதை மறுக்கவும் இல்லை—மக்களின் வெறுப்பைத் தேடிக்கொண்டுள்ளது என்பதற்கு மாறுபட்ட கருத்தும் தெரிவிக்கவில்லை. செயற்குழு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கும் முறைக்கு மட்டும் தன் எதிர்ப்பைத் தெரிவித்துள்ளார்.

அனைத்திந்தியக் காங்கிரஸ் கமிட்டியின் செயற்குழுக் கூட்டம் டில்லியில் நடைபெற்றது. காங்கிரஸ் கட்சியின் சட்டதிட்டங்களைப் பற்றி விவாதம் நடைபெற்றது. அந்தக் கூட்டத்தில் டி.என். பாண்டே என்பார், ‘காங்கிரஸ் இப்போது மக்களின் மதிப்பை இழந்திருப்பதைப் போல, இதற்குமுன் என்றும் இருந்ததில்லை’ என்றுகூறி, ‘காங்கிரஸ் தலைமையின் நியாயமற்ற போக்கே இதற்குக் காரணம்’ என்று குற்றம் சாட்டினர்.

இதற்கு பண்டித நேரு பதிலளிக்கையில், ‘இன்று காங்கிரசுக்கு ஏற்பட்டுள்ள கெட்ட பெயருக்குக் காரணம் மாநில—மாவட்ட காங்கிரஸ் குழுக்களே’ என்றுகூறி, தலைமையைக் குறைகூறுவதை எதிர்த்து வாதிட்டுள்ளார்!

★

காங்கிரஸ் மேலிடத்தின் ஆதிக்கப்போக்கு

மகாவீர் தியாகியின் கண்டனம்

புதுடில்லி, செப். 3—

அனைத்திந்திய காங்கிரஸ் செயற்குழுவில் 21 உறுப்பினர்கள் இடம் பெறுகின்றனர்; இவர்கள் அனைவரும் நியமனம் செய்யப்படுபவர்களாம். இதில் குறைந்தது 10 பேராவது தேர்ந்தெடுக்கப்படவேண்டும் என்று மகாவீர் தியாகி காங்கிரசுக் குழுக் கூட்டத்தில் வற்புறுத்தியுள்ளார்.

“செயற்குழு உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படாமல், நியமனம் செய்யப்படும் இப்போதைய முறையே நீடித்தால், காங்கிரசில் சனநாயகத்திற்கே இடமிருக்காது. அ. இ. கா. கமிட்டி செயற் குழுவின் ஆதிக்கத்திற்கு அடங்கி நடக்க வேண்டிய கைப்பாவையாகிவிடும்” என்று அவர் எச்சரித்துள்ளார்.

அடுத்து பேசிய டி. என். பாண்டே, தியாகியின் கருத்தை ஆதரித்து, எதிர்காலத்தில் பண்டித நேரு செயற்குழு உறுப்பினர் என்ற முறையில் கலந்து கொள்ள அழைக்கப்படக்கூடாது என்றும், 4 அணு உறுப்பினராகக்கூட காங்கிரசில் இல்லாத காந்தியார், எப்படி ஆலோசகர் என்ற முறையில் அந்தக் காலத்தில் பங்கெடுத்துக் கொண்டாரோ, அதே போன்று நேருவும் நண்பர் என்ற முறையிலும், வழிகாட்டி என்ற முறையிலும் காங்கிரஸ் குழுவில் பங்கெடுத்துக் கொள்ள வேண்டும் என்றும் வற்புறுத்தியுள்ளார்.

திரு. டி. என். பாண்டே மேலும் பேசுகையில், இன்றையக் காங்கிரஸ் பேரவையின் உண்மை நிலையைப் படம்பிடித்துக் காட்டியுள்ளார்.

“காங்கிரஸ் தலைமை முரண்பட்ட கொள்கைகளுடன் இயங்கிவருகிறது!

“காங்கிரஸ் தலைமை பகுத்தறிவுக்கும், நியாயத்திற்கும் முரண்பட்டு நடக்கின்றது!

‘, இதுவே, காங்கிரஸ் நிறுவனம், மக்கள் மதிப்பை இழந்துள்ளதற்குக் காரணம்!

“காங்கிரஸ்மீது மக்கள் இப்போது கொண்டுள்ள வெறுப்பைப் போன்று இதுவரை எப்போதுமே கொண்டதில்லை.”

★

‘ஆமாம் சாமி’களால் காங்கிரசுக்கு ஆபத்து!

மகாவீர் தியாகி கண்டனம்

புதுடில்லி, செப். 3—

காங்கிரசுப் பேரவையின் சட்டதிட்டங்களை ஆராய்ந்து உரிய திருத்தங்களை மேற்கொள்ள, அகில இந்திய காங்கிரஸ் குழு கூடி விவாதித்துள்ளது.

செயற் குழுவில் அனைவரையும் நியமிக்கும் முறையைக் கண்டித்து திரு. தியாகி பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

“காங்கிரஸ் செயற்குழுவிற்கு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்காமல், நியமிக்கும் முறையைப் பின்பற்றுவதானது, கண்மூடித்தனமாக தலைவர்களைப் பின்பற்றும் ‘ஆமாம் சாமி’களை உற்பத்தி செய்யவே பயன்படும்.

“பண்டித நேரு காங்கிரஸ் தலைவராகவும், நாட்டின் தலைவராகவும், இருப்பது நல்லதல்ல; அவர் மற்றவர்களின் எண்ணங்களுக்கு ஏற்றவாறு தன்னை மாற்றிக் கொள்கிருர். அவருக்குப் பிறகு வருபவர்கள் அவ்வாறு இருக்கமாட்டார்கள்”

பன்மொழிப் புலவர் பொன்விழா

பொதுச்செயலாளர் வேண்டுகோள்

பெரியோர்களே! தோழர்களே!

வணக்கம். பன்மொழி பயின்று தேர்ந்த நல்லாசிரியரும், நற்றமிழ் வாழ—வளர அரும்பணிகள் பல ஆற்றி வருபவரும், சீர்திருத்தச் செம்மலும், பகுத்தறிவு மணம் எங்கணும் பரப்பி வருபவரும், பொதுநலத் துறைக்கே தம்மை முழுக்க முழுக்க ஒப்படைத்துச் செயலாற்றி வருபவரும், நேரிய கொள்கைகளுக்காகப் பரிந்து பேசவும்—போராடவும்—தடியடி தாங்கவும்——சிறை புகவும் துணிந்த செயல் வீரரும், திராவிட முன்னேற்றக் கழகத்திடத்து நீங்காப் பற்றும், தணியா ஆர்வமும் கொண்டு உழைத்து வருபவரும் ஆன பன்மொழிப் புலவர் கா. அப்பாத்துரையார் அவர்கள் ஐம்பது ஆண்டுகள் நிறைவு பெறுகிருர்கள் என்பது நமக்கெல்லாம் மட்டற்ற மகிழ்ச்சியை அளிப்பதாகும்.

பன்மொழிப் புலவரின் பொன்விழாவைப் பெருமைக்குரிய வகையிலும், பூரிப்புக் கொள்ளும் முறையிலும் சிறப்பாக நடத்த வேண்டும் என்பது நண்பர்கள் பலரின் வேணவாவாகும். அவரது பொன்விழாவைக் கொண்டாடி நாம் மகிழ்ச்சியடைவதோடு மட்டுமல்லாமல், அவரையும் நிலையாக மகிழ்விக்க வேண்டிய கடப்பாடுடையவர்களாகவும் இருக்கிறேம். பொதுவாகப் புலவர் பெருமக்களைப் பீடிக்கின்ற வறுமை அவரைப் பெருமளவுக்குப் பீடித்து வாட்டி வதைக்கிறது. அந்தக் கொடுமையினின்றும் அவரை விடுவித்து, மகிழ்ச்சிகொள் அமைதியான வாழ்வில் அவரை ஈடுபடுத்த வேண்டியும், அவருக்கு ஆக்கமும் ஊக்கமும் பயக்கவேண்டியும் அவருக்குச் சிறப்புக்குரிய வகையில் பணமுடிப்பைப் பரிசாக வழங்கவேண்டும் என்று நண்பர்கள் பலரும் விரும்பியுள்ளனர்.

பன்மொழிப் புலவர் பொன்விழாக்குழு ஒன்றை உருவாக்கி, அதில் அன்பர்கள் பலரையும் உறுப்பினர்களாக ஆக்கிடும் பொறுப்பினை கண்ணதாசன் அவர்கள் மேற்கொண்டுள்ளார்கள்.

விழாக் குழுவின் பொருளாளராக இருந்து பணியாற்ற அண்ணா அவர்கள் இசைவு தந்துள்ளார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

நிதி தந்து உதவுவோர்,

‘சி. என். அண்ணாதுரை, C/O ‘நம் நாடு’
24, சூரியநாராயண செட்டித் தெரு,
இராயபுரம், சென்னை-13.’

என்ற முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு வேண்டிக் கேட்டுக் கொள்ளப்படுகிருர்கள்.

கழகத் தோழர்களையும், கழக ஆதரவாளர்களையும், தமிழார்வங்கொண்ட பிற அன்பர்களையும் பன்மொழிப் புலவரின் பொன்விழா முயற்சி வெற்றியுற பேருதவி புரியுமாறு வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.

அன்பன்,

24—7—57
‘அறிவகம்’
சென்னை-13

இரா. நெடுஞ்செழியன்
பொதுச்செயலாளர் தி. மு. க.

மக்கள் சபையில் கழக உறுப்பினர் கேள்விகள் :

7,12,700 டன் உணவுத் தானியம் இறக்குமதி செய்யப்பட்டதாம்!

சென்னைக்கு 27,800 டன் மட்டுமே தரப்பட்டதாம் !

"1957-ம் ஆண்டு சனவரித் திங்கள் முதல் மார்ச் திங்கள் முடிய இந்திய அரசாங்கம் எவ்வளவு உணவுப் பொருளை இறக்குமதி செய்துள்ளது? பற்றுக்குறையைச் சமாளிக்க அதை மாநில வாரியாக விநியோகிக்கப்பட்டதா?

என்று, மக்கள் சபையில் நமது கழக உறுப்பினர் தோழர் ஆர். தருமலிங்கம் கேட்டார்.

மத்திய உணவு அமைச்சர் திரு. ஜெயின் இதற்குப் பதிலளிக்கையில் குறிப்பிட்டதாவது:—

"மொத்தம் 7,12,700 டன் உணவுப் பொருள் மூன்று மாதகாலத்தில் இறக்குமதி செய்யப்பட்டது; இதில் சென்னைக்கு 27,800 டன் மட்டுமே தரப்பட்டது."

மற்ற மாநிலங்களுக்கு கீழே குறித்தவாறு உணவுப் பொருள்கள் அனுப்பப்பட்டனவாம் :—

	டன்கள்
ஆந்திரம் :	6,600;
மைசூர் :	17,000;
கேரளம் :	57,000;
அசாம் :	6,500;
பீகார் :	26 800;
பம்பாய் :	1,24,600;
மத்தியப் பிரதேசம் :	16,700;
ஒரிசா :	1.900;
பஞ்சாப் :	28,200;
இராஜஸ்தான் :	15.800;
உத்தரப் பிரதேசம் :	1,41 400;
மேற்கு வங்கம் :	1,02,500;
டில்லி :	51,500;
ஜம்மு-காஷ்மீர் :	2,000;
திரிபுரா :	5,000;
அந்தமான் :	400;
மற்றப் பகுதிகள் :	80,500;

துணை அமைச்சர் கரமவாஸ்கான் 'இல்லை' என்று திட்டவட்டமாகப் பதிலளித்துள்ளார்.

★

நெய்வேலித் திட்டம்

இந்த ஆண்டில் இறக்குமதியான கருவிகளின் விலை மதிப்பு

"நெய்வேலியில் நிலக்கரி எடுப்பதற்காக வெளிநாடுகளிலிருந்து இந்த ஆண்டில் கருவிகள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளனவா?

"எந்தெந்த நாடுகளிலிருந்து இச்கருவிகள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளன? அவற்றின் மதிப்பு என்ன?

என்று, தோழர் ஆர். தருமலிங்கம் அவர்கள் கேட்டதற்கு, மத்திய அமைச்சர் சுவரண் சிங் பதிலளிக்கையில் குறிப்பிட்டதாவது:—

"இங்கிலாந்திலிருந்து ரூ. 25 இலட்சம்; அமெரிக்காவிலிருந்து ரூ.20 இலட்சம் மதிப்புமுள்ள கருவிகள், நெய்வேலித் திட்டத்திற்காக இந்த ஆண்டு இறக்குமதி செய்யப்பட்டுள்ளன."

★

ரயில்வே ஊழியர்கள் பயிற்சி நிலையம்

தென்னாட்டில் ஏற்படுத்தும் நோக்கம் இல்லையாம்!

இந்திய இரயில்வேக்களில் பணியாற்றும் ஊழியர்களுக்கான தொழில் நுணுக்கப் பயிற்சி நிலையங்கள் அனைத்தும் வடநாட்டிலேயே ஏற்படுத்தப்பட்டுள்ளனவாம்!

மத்தியப் பிரதேச மாநிலத்தில் ஒரு பயிற்சி நிலையமும், உத்தரப் பிரதேச மாநிலத்தில் ஷாஜகான் பூரில் ஒரு பயிற்சி நிலையமும், பீகார் மாநிலத்தில் மோதேபூரில் ஒரு பயிற்சி நிலையமும்—ஆகமொத்தம் மூன்று பயிற்சி நிலையங்கள் வடநாட்டில் ஏற்படுத்தப்பட்டுள்ளனவாம்!

"தென்னாட்டில் ஒரு பயிற்சி நிலையம் ஏற்படுத்தும் நோக்கம் உண்டா?"

என்று, தோழர் ஆர். தருமலிங்கம் கேட்டதற்கு, இரயில்வே

★

ரூ. 21,12,965 செலவில் மீன் ஆராய்ச்சி

1956—57-ல் மீன் ஆராய்ச்சிக்காக இந்திய அரசாங்கம் மொத்தம் ரூ. 21,12,965 செலவிட்டுள்ளதாம்.

மத்திய மீன் ஆராய்ச்சி நிலையம் இந்தத் தொகையை கல்கத்தாவிலும், மண்டபத்திலும் செலவிட்டுள்ளதாம்.

பம்பாயில் உள்ள ஆழ்கடல் மீன் பிடிப்பு நிலையத்திற்கும் இந்தத் தொகையிலிருந்து செலவிடப்பட்டுள்ளதாம்.

தோழர் ஆர். தருமலிங்கம் கேட்ட ஒரு கேள்விக்கு மத்திய அமைச்சர் செயின் பதிலளிக்கையில் இந்த விவரங்களைத் தந்தார்.

துகவூர் அண்ணா படிப்பக பொதுக்கூட்டம்

7—9—57 மாலை 6 மணிக்கு, இராமநாதபுரம் மாவட்டம், துகவூர் காந்தி திடலில், அண்ணா படிப்பகச் சார்பில் ஓர் பொதுக்கூட்டம் நடைபெறும். தோழர் எஸ். தமிழ்தாசன் தலைமை வகிப்பார். தோழர்கள் மதுரை-எஸ். முத்து, நாகலிங்கம், நித்தியானந்தம், கே. ஆர். எஸ். மணி. எஸ். ஆறுமுகம் ஆகியோர் பேசுவர். கே. எம். பால்ராஜ் இன்னிசை வழங்குவார்.

கலைவாணர் நினைவாக

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

'கலைவாணர்' என்ற பெயரால் ஒரு படம் வெளியிட்டு, அதில் வரும் தொகையைக் கொண்டு அவர்வழி அறவழிச் செலவில் ஈடுபடுத்துவதே அவருக்கு நாம் காட்டும் நன்றியாகும்" என்று தோழர் மு. கருணாநிதி அவர்கள் கருத்தறிவித்துள்ளார்.

கழகக் கூட்டங்கள்

சிவகாசி :
சிவன்கோவில் எதிரில்
7—9—57 மாலை 5-30 மணிக்கு
தலைவர் : நா. கா. குப்புசாமி
பேசுபவர் :
இரா. நெடுஞ்செழியன்

★

விருதுநகர் :
அம்மன்கோவில் பொட்டலில்
7—9—57 இரவு 9 மணிக்கு
தலைவர் : கனகசபாபதி
பேசுவோர் :
இரா. நெடுஞ்செழியன்
எஸ். கணபதி
எஸ். இரத்தினம்
எம். சுப்பையா
அரங்கநாதன்
இன்னிசை : தானியல்

★

காரியாங்குடி :
(திருவாரூர் சமீபம்)
சாமி அரங்கில்
7—9—57 மாலை 6 மணிக்கு
தலைவர் : எஸ். இராமநாதன்
பேசுவோர் :
என். வி. நடராசன்
எஸ். வி. கல்யாணசுந்தரன்

★

அம்மாப்பேட்டை :
(தஞ்சை மாவட்டம்)
சந்தைப்பேட்டை திடலில்
7—9—57 மாலை 6 மணிக்கு
தலைவர் : ப. நாராயணசாமி
பேசுபவர் :
கி. மனோகரன்

★

பள்ளத்திவயல் :
(அறந்தாங்கி வட்டம்)
அண்ணா திடலில்
6—9—57 மாலை 6 மணிக்கு
தலைவர் : நா. மாரிமுத்து
பேசுவோர் :
ந. தருமலிங்கம்
சுப. சதாசிவம்
மு. சீனிவாசன்
அரு. குமாரசாமி
இன்னிசை : எம். ஏ. மஜீத்

பொதுச்செயலாளர்

இரா. நெடுஞ்செழியன்

சுற்றுப்பயணம்

செப். 7 : மாலை-சிவகாசி
இரவு விருதுநகர்
8 : மாலை-இராசபாளையம்
இரவு-சத்திரப்பட்டி
9 : மாலை-நத்தம் பகுதி
இரவு-பள்ளப்பட்டி
10 : மாலை-காவேரிநகர்
இரவு-வெட்டன விடுதி
11 : காலை-சமயபுரம்
(திருச்சி மாவட்டம்)
மாலை-ஆலங்குடி
(தஞ்சை மாவட்டம்)
இரவு-தாராசுரம்

கலைவாணர் மறைவுக்கு டாக்டர் எஸ். தருமாம்பாள் அஞ்சலி

டாக்டர் எஸ். தருமாம்பாள் அம்மையார் அவர்கள், கலைவாணர் மருத்துவ மனையில் சேர்ந்த நாள் முதல், தனக்குக் கால் எடுத்து வைத்து போய்ப் பார்க்க இயலவில்லையே என அடிக்கடி கண்ணீர்விட்டார்கள்; வெள்ளி பகல், கலைவாணர் மறைந்த செய்தி கேட்டு உள்ளம் துடித்து அலறி அழுதார்கள்; அழுது கூறியதாவது :—

"யான் சொல்லி அனுப்பும் எந்தப் பணிக்கும் தட்டாமல் சென்று பணியாற்றும் ஒரு கர்மவீரனை இனி என்று காண்பேன். நடிகராய் — நடிப்பாசிரியராய் — டைரக்டராய் இருந்து அவர் ஆற்றிய செம்மை வாய்ந்த சீர்திருத்தத் தொண்டுகள் அளப்பரிதாம்.

"தேசியப் போர்முன்னணி இயக்கத்திற்கு அவர் செய்த தொண்டும், காந்தியாருக்கு எழுப்பிய ஸ்தூபியும், பல்லாயிரக்கணக்கான ஏழை மாணவ மாணவிகளுக்கு உதவியளித்ததும், மறக்கற்பாலதன்று. தனக்கென வாழாது பிறர்க்கென வாழ்ந்த பெருந்தகையாளர் ஆகிய அக்கலைஞரை இனி எப்பொழுது காணப்போகிறேன். நமது கழகத்திற்காகவே வாழ்ந்த கலைஞனை—தியாகியை — சுடரை எப்பொழுது காண்பது! வள்ளுவன் நல்லறத்தை 'வில்லுப் பாட்டில் அமைத்த அவ்வித்தகனை இனி நாம் என்று காண்போம்?

"காட்சிக் கெளியனாய், கண்ணுக்கினியனாய், கடுஞ்சொல் அல்லனாய்விளங்கிய அந்தப் புரவலனை அந்தோ, இயற்கை சதி செய்துவிட்டது, கலைவாணரின் தூய பண்பைப் பின்பற்றுவோமாக; செந்தமிழ் விறலி டி. ஏ. மதுரத்திற்கு ஆறுதல் கூற, அந்தோ! சொற்கள் இல்லையே!"

[11 ஆண்டுகளுக்கு முன் கலைவாணர் சிறையில் இருந்த போது அவரை மீட்க அரும்பாடுபட்டவர்களில் முக்கிய மானவர் டாக்டர் எஸ். தருமாம்பாள் அம்மையார் என்பது இங்குக் குறிப்பிடத்தக்கது.]

'போர்வாள்'

கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன்

நினைவு மலர்

★

14—9—57 போர்வாள் இதழ் மலராக வெளிவருகிறது. மலரில் அரசியல் அறிஞர்கள், பேராசிரியர்கள், பத்திரிகாசிரியர்கள், இலக்கிய மன்னர்கள், நாடகாசிரியர்கள், நடிகர், நடிகைகள், டைரக்டர்கள், ஆகிய பலரும் கலைவாணர் பற்றிய தம் கருத்துரைகளைத் தருகிறார்கள்.

★

முழு வாழ்க்கை வரலாறும் 100-க்கு மேற்பட்ட படங்களும் உள்ளன.

மூவர்ண அட்டை

60 பக்கங்கள் — விலை அணா 12.

விற்பனையாளர்கள் முன்பணத்துடன் தேவைக்கு எழுதுக. ஒரு மலர் வேண்டுவோரும், சந்தாதாரரும் ரூ. 1—4—0 அனுப்பவும்.

குறிப்பு :—அடுத்த வார இதழ் மலராக வருவதால் இவ்வார இதழ் வெளிவராது.

'போர்வாள்' 128, பிராட்வே, சென்னை-1.

'வானம்பாடி'

(கவிதை மாத இதழ்)

ஆசிரியர் : த. கோவேந்தன்

★

ஆண்டு சந்தா ரூ. 2.—தனி இதழ் 17 காசு

செப்டம்பர் 15-ந் தேதி

வெளிவரும்

விபரங்கட்கு : 'வானம்பாடி' சைதாப்பேட்டை, வேலூர் (வ. ஆ.)

கேசரி பருப்பு விளைவிக்கும் கேடுகள்

சென்னை அரசாங்கத்தின் எச்சரிக்கை

"கேசரிப் பருப்பு, உடல் நலத்துக்குப் பெரும் தீங்கு இழைக்கக் கூடியது; அதைத் தனியாகவோ, துவரம் பருப்பில் கலந்தோ உட்கொள்ளுவது அபாயகரமானது எனப் பொது மக்கள் எச்சரிக்கப்படுகிறார்கள்"

—என்று, அரசாங்க செய்தித் துறையினர் வெளியிட்டுள்ள அறிக்கை குறிப்பிடுகிறது; அவ்வறிக்கை மேலும் கூறுவதாவது :—

"கேசரிப் பருப்பு என்பது இந்தியாவில் பல்வேறு இடங்களில்—குறிப்பாக வட இந்தியப் பகுதிகளில்பயிரிடப்படும்ஒருவகை செடியிலிருந்து கிடைப்பது; அது துவரையைப்போல இருக்கும். வேறு எவ்விதப் பருப்பும் பயிராகாத இடங்களில் மாரிக்காலப் பயிராக இது பயிர் செய்யப்படுகிறது. முக்கியமாக, கால்நடை தீவனத்துக்காகவே இதைப் பயிர் செய்கிறார்கள். ஆனால் மிக மலிவு என்ற காரணத்தாலும் எளிதில் விளைவிக்கக்கூடியது என்பதாலும், ஏழை மக்கள் இதை உணவாக உபயோகிப்பது உண்டு.

"துவரம் பருப்பில் கலப்படம் செய்ய கேசரிப் பருப்பை உபயோகிப்பது உண்டு; ஆனாலும், கேசரிப் பருப்பு காவி மஞ்சள் நிறம் உள்ளது ஆதலாலும், அதன் வடிவத்தைக் கொண்டு துவரம் பருப்புக்கும் இதற்கும் உள்ள மாறுபாட்டைக் கண்டறியலாம்.

"கேசரிப் பருப்பை வழக்கமாக உண்பதால் என்ன கெடுதி என்பது ஏற்கனவே உணரப்பட்டுவிட்ட ஒன்றாகும். இந்தப் பருப்பை வழக்கமாக உண்பதால் பாரிசவாதம் ஏற்படும். அவ்வப்போது, சிறு அளவில் இந்தப் பருப்பை உண்பவர்களுக்கு மலச்சிக்கல், இதா செரிமான தொந்தரவுகள் ஏற்படுகின்றன. இதன் கெடுதிகள் பெரும்பாலும் மழைக் காலத்திலேயே ஏற்படுகின்றன. இதனால் பாதிக்கப்படுவோரில் பெரும்பாலானோர் ஆண்களே. இந்தப் பருப்பை உண்டதால் நேர்ந்த துன்பந்தரும் விளைவுகள் 30 வயதுக்கு உட்பட்டோரிடையே நன்கு தெரிகின்றன. திடீர் பாரிசவாதத்தால் இடுப்புக்குக் கீழே உள்ள உடலுறுப்புகள் பயனற்றவையாகி விடுகின்றன.

"இந்தப் பருப்பில் உள்ள நச்சுத் தன்மையான பொருள் கூறுபாடுகளே இதற்குக் காரணம். கால்நடைகளுக்கும் இந்தப் பருப்பு தீங்கு ஏற்படுத்தக் கூடியதே. இந்தப் பருப்பை உட்கொள்ளும் கால்நடைகள் பாரிசவாதத்தால் பீடிக்கப்பட்டு, அவயவங்கள் செயலிழந்து விடுகின்றன.

"கேசரிப் பருப்பு பயிர் செய்வதும், உபயோகிப்பதும் பொது மக்களின் உடல் நலத்துக்கு மிகவும் தீங்கு பயப்பது என்பது தெளிவு. இந்த மாநிலத்தில் சாகுபடியாளர்கள் அதைப் பயிரிடாமல் இருப்பார்களாக! இந்தப் பருப்பை தனியாகவோ, துவரம் பருப்புடன் கலப்படம் செய்தோ விற்காமல்இருப்பதன்மூலம் வர்த்தகர்கள், தேச மக்களின் உடல் நலம் பேணுவதில் உதவ முன்வருவார்களாக."

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப் பெற்று, (24. குரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர் : இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ.